நியூ சவுத் வேல்ஸ் போக்குவரத்துக் கழகம் (Transport for NSW)

# எப்பிங் (Epping) பாலச் செயல்திட்டம்

## கருத்து வடிவமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளின் மதிப்பாய்வு பற்றிய உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்

செப்டம்பர் 2024

Australian Government

NSW GOVERNMENT



மாற்றுப் பாலத்தின் வான்வழிப் பார்வையிலான ஓவியரின் பதிவு (குறிப்பாகத் தெரிவிப்பது மட்டுமே, விரிவான வடிவமைப்பின் மாற்றத்துக்கு உட்பட்டது)

நெரிசலைக் குறைக்கவும், பயண நேரத்தைக் குறைக்கவும் மற்றும் சாலைப் பாதுகாப்பை மேம்படுத்தவும் எப்பிங் பாலத்திற்கான மாற்று ஏற்பாட்டுக்கு 220 மில்லியன் டாலர் நிதியை ஆஸ்திரேலிய மற்றும் நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கங்கள் முதலீடு செய்கின்றன.

**செயல்திட்டம் மற்றும் திட்டமிடப்பட்ட தணிப்பு நடவடிக்கைகளிலிருந்து சாத்தியமான சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தாக்கங்களை அடையாளம் காண ஒரு கருத்து வடிவமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளின் மதிப்பாய்வு தயாரிக்கப்பட்டுள்ளது.**

**சமூகத்தினர் மற்றும் பங்குதாரர்கள் 7 அக்டோபர் 2024 திங்கட்கிழமைக்குள் பின்னூட்டத்தை வழங்குவதற்கு அழைக்கப்படுகிறுர்கள்.**

## செயல்திட்டத்தின் நன்மைகள்

- அதிகரித்த சாலைத் திறன், மேம்பட்ட போக்குவரத்து ஓட்டம் மற்றும் பயண நேரங்கள்
- மேம்படுத்தப்பட்ட சாலைப் பாதுகாப்பு
- மேம்பட்ட செயல்பாட்டு இயக்கம்
- எப்பிங் நகர மையத்துடன் இணைப்பு

தாருக் (Dharug) தேசத்தின் வாலுமேடேகல் (Wallumedegal) மக்களை நாங்கள் பணிபுரியும் நிலங்களின் பாரம்பரிய பாதுகாவலர்களாக நியூ சவுத் வேல்ஸ் போக்குவரத்துக் கழகம் ஒப்புக்கொள்கிறது, அத்துடன் கடந்த கால மற்றும் நிகழ்கால மூதாதையர்களுக்கு மரியாதை செலுத்துகிறது.

## பின்னணி

எப்பிங் ரோடு என்பது கீழ் வடக்குக் கடற்கரை (lower North Shore) மற்றும் சிட்னி CBD யை மேல் வடக்குக் கடற்கரை (upper North Shore) மற்றும் ஹில்ஸ் மாவட்டத்துடன் இணைக்கும் ஒரு பெரிய நகர்ப்புறச் சாலையாகும், இது வடக்கு ரைடு (North Ryde) மற்றும் மெக்வையரி பூங்காவின் (Macquarie Park) வணிக, தொழில்துறை மற்றும் பல்கலைக்கழகப் பகுதிகளை அடைய வழிவகுக்கிறது.

**எப்பிங் நகர மையத்துக்குச் செல்ல அனைத்து வகையான போக்குவரத்து முறைகளிலும் இணைப்பை எப்பிங் பாலம் வழங்குகிறது.**

**சாலை:** எப்பிங் சாலை (Epping Road), பிளாக்ஸ்லேண்ட் சாலை (Blaxland Road) மற்றும் லாங்ஸ்டன் பிளேஸ் (Langston Place) உள்ள பாலத்தின் கிழக்குப் பகுதியில் இருந்து, பீக்ராஃப்ட் சாலை (Beecroft Road), பிரிட்ஜ் தெரு (Bridge Street) மற்றும் ஹை தெரு (High Street) உள்ள மேற்குப் பகுதிக்கு.

**இரயில்:** எப்பிங் இரயில் நிலையம் மற்றும் T9 வடக்குத் தடம் (Northern Line), மத்தியக் கடற்கரை (Central Coast) மற்றும் நியூகாஸில் தடம் (Newcastle Line) மற்றும் மெட்ரோ வட மேற்குத் தடம் (Metro North West Line) இரயில் சேவைகள்.

**பேருந்து:** எப்பிங் பேருந்து பயணமாற்றம் (interchange) மற்றும் 291, 550, 288, 290, 291 மற்றும் 651 பேருந்துச் சேவைகள்.

## எப்பிங் நகர மைய வளர்ச்சிக்கு ஆதரவு

எப்பிங் மற்றும் அதன் நகர மையம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதால், எப்பிங் பாலம் முழுவதும் போக்குவரத்துத் தேவை தொடர்ந்து வளரும். இந்தச் செயல்திட்டம் பின்வருவனவற்றை நிறைவு செய்கிறது:

- எப்பிங் நகர மையத்தில் பொதுப் போக்குவரத்து முதலீடு 2013 இல் எப்பிங் நிலையம் மேம்படுத்தப்பட்டது மற்றும் 2019 இல் மெட்ரோ வடமேற்குத் தடம் திறக்கப்பட்டது
- எப்பிங் நகர மையம் நகர்ப்புற செயல்படுத்தல் திட்டத்தின் ஒரு பகுதியாக 2018 இல் எப்பிங் நகர மையத்தில் சாலை மற்றும் குறுக்குச் சாலை மேம்படுத்தல்கள் நிறைவடைந்தன.
- எதிர்கால எப்பிங் நகர மைய மேம்பாடு மற்றும் எதிர்காலச் சாலை மற்றும் இரயில் திட்டங்கள்.

## புதிய, அகலமான, பாதுகாப்பான மற்றும் திறனுள்ள பாலம் ஒன்றினை வழங்குதல்

எப்பிங் பாலம் 124 ஆண்டுகள் பழமையானது. பாலத்தை விரிவுபடுத்தும் திட்டத்தில் இருந்து பாலத்தை மாற்றும் செயல்திட்டத்திற்கான செயல்திட்டப் பரிணாம வளர்ச்சி, பல பத்தாண்டுகளுக்குச் சமூகத்திற்குப் பாதுகாப்பான மற்றும் மிகவும் திறனான பாலத்தை வழங்கும்.


அதிக அளவிலான போக்குவரத்துத் தாமதம் மற்றும் எப்பிங் சாலையில் நீண்ட வாகன போன்றவற்றால் எப்பிங் பாலத்தில் உச்ச காலங்களில் நெரிசல் ஏற்படுகிறது. ஒவ்வொரு நாளும் பாலத்தைக் கடக்கும் 63,000 வாகனங்களுக்கான முக்கிய சாலைத் திறனை ஏற்படுத்த, தற்போதுள்ள ஐந்து வழிப் பாலத்திற்குப் பதிலாக புதிய ஏழு வழிப் பாலத்தை அமைக்க இந்தச் செயல்திட்டம் முன்மொழிகிறது.

தற்போதுள்ள எப்பிங் பாலத்தை புதிய அகலமான பாலத்துடன் மாற்றுவதன் மூலம் பின்வருவன அமைக்கப்படும்:

- பீக்ராஃப்ட் சாலையில் (Beecroft Road) சேரக்கூடிய கூடுதலான மேற்கு நோக்கிய ஒரு பாதை
- பிளாக்ஸ்லேண்ட் சாலையில் (Blaxland Road) சேரக்கூடிய கூடுதலான தெற்கு நோக்கிய ஒரு வலதுபுறம் திரும்பும் பாதை
- பாலத்தின் தெற்குப் பகுதியில் ஒரு பகிரப்பட்ட நடை மற்றும் மிதிவண்டிச் சவாரிப் பாதை
- உயர்த்தப்பட்ட மையத் திட்டு
- பாலப் பாதுகாப்புத் திரைகள்.

கூடுதல் சாலை மேம்படுத்தல்களில் பின்வருவன அடங்கும்:

- பீக்ராஃப்ட் சாலை (Beecroft Road), பிளாக்ஸ்லேண்ட் சாலை (Blaxland Road), எப்பிங் சாலை (Epping Road), பிரிட்ஜ் தெரு (Bridge Street), ஹை தெரு (High Street) மற்றும் லாங்ஸ்டன் பிளேஸ் (Langston Place) ஆகிய இடங்களுக்கான சாலை மேம்பாடுகள்.
- எப்பிங் சாலை (Epping Road), பிளாக்ஸ்லேண்ட் சாலை (Blaxland Road) மற்றும் லாங்ஸ்டன் பிளேஸ் (Langston Place) சந்திப்பில் போக்குவரத்து சமிக்ஞை விளக்குகளை மேம்படுத்துதல்
- எப்பிங் சாலையின் குறுக்கே ஒரு பாதசாரி கடக்கும் நடைபாதை
- ஹை தெரு (High Street) மற்றும் பிரிட்ஜ் தெருவில் (Bridge Street) பாதசாரி கடக்கும் (வரிப்பட்டை) நடைபாதைகள் உயர்த்தப்பட்டுள்ளன.




திட்டமிடப்பட்ட புதிய பாலப் பகுதி (மேற்கு நோக்கி)

## சுற்றுச்சூழல் மதிப்பீடு

சுற்றுச்சூழல் காரணிகளின் மதிப்பாய்வு (REF) செயல்திட்டம் எவ்வாறு பின்வருவனவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை விவாதிக்கிறது:

- கட்டுமானம், போக்குவரத்து, சத்தம் மற்றும் அதிர்வு மற்றும் காட்சித் தாக்கங்கள் மூலம் உள்ளூர் சமூகம்
- தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள்
- மண் மற்றும் நீரின் தரம்
- பழங்குடியினர் மற்றும் பழங்குடியினர் அல்லாதோர் பாரம்பரியம்.

REF மற்றும் துணைச் செயல்திட்டத் தகவல்களைப் பார்வையிட, கீழே உள்ள க்யூ.ஆர். குறியீட்டை (QR code) அலகீடு (scan) செய்யவும் அல்லது **transport.nsw.gov.au/epping-bridge** என்ற இணையதளத்துக்குச் செல்லவும்.

REF -ஐப் பார்வையிட க்யூ.ஆர். குறியீட்டை (QR code) அலகீடு செய்யவும்

**திட்டத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டு, 2025 -ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு முடிக்க சுமார் ஐந்து ஆண்டுகள் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. விரிவான வடிவமைப்பின் போது மற்றும் டெலிவரி பார்ட்னருடன் இணைந்து கட்டுமானக் காலத்தைக் குறைப்பதற்கான வாய்ப்புகளை நாங்கள் பார்ப்போம்.**

### உங்களுக்குத் தெரியுமா


எப்பிங் நிலையம், முதலில் ஃபீல்ட் ஆஃப் மார்ஸ் (Field of Mars) என்று பெயரிடப்பட்டு, 1886 ஆம் ஆண்டில் எப்பிங்கில் உள்ள சர்ரே தெருவில் (Surrey Street) திறக்கப்பட்டது, இது தற்போதைய இருப்பிடத்திலிருந்து சுமார் 400 மீட்டர் வடக்கே உள்ளது. இது 1887 இல் கார்லிங்ஃபோர்ட் (Carlingford) என மறுபெயரிடப்பட்டது, மேலும் 1890 வாக்கில் அது தெற்கு நோக்கி அதன் தற்போதைய இடத்திற்கு மாற்றப்பட்டது. 1900 ஆம் ஆண்டில், இது எப்பிங் நிலையம் என்று மறுபெயரிடப்பட்டது, மேலும் எப்பிங் பாலம் 1891 இல் கட்டப்பட்ட ஆரம்ப காலத்திய மரத்தாலான பாதசாரி நடை பாலத்திலிருந்து இரும்புப் பாலமாக மேம்படுத்தப்பட்டது.

பல ஆண்டுகளாக எப்பிங் பாலத்தில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. 1929 மற்றும் 1943 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், பாலம் அகலப்படுத்தப்பட்டது, மேலும் தற்போதுள்ள கான்கிரீட் தளம் மற்றும் இரும்பிலான ஆதரவு அமைப்பு கட்டப்பட்டது. 1969 ஆம் ஆண்டில், எப்பிங் பாலம் அதன் தற்போதைய அகலமான 22 மீட்டருக்கு மேலும் விரிவுபடுத்தப்பட்டது.




எப்பிங் நிலையம் (பின்னணியில் எப்பிங் பாலம்) 1928
புகைப்பட ஆதாரம்: ஹார்ன்ஸ்பி ஷையர் நகரவை (Hornsby Shire Council)

## எப்பிங் பாலச் செயல்திட்டக் கருத்து வடிவமைப்பு




இதை இன்னும் விரிவாகப் பார்வையிட, செயல்திட்ட வலைப்பக்கத்துக்குச் செல்லவும்

## உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்

**பின்னூட்டத்தைப் பின்வரும் வகையில் சமர்ப்பிக்கலாம்:**

- **parramatta@transport.nsw.gov.au** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புதல்
- **transport.nsw.gov.au/epping-bridge** மூலம் எங்கள் ஊடாடும் (interactive) வரைபடத்தில் ஒரு கருத்தை வெளியிடுதல்
- தபால் மூலம் பின்னூட்டத்தை வழங்குதல்: எப்பிங் பாலச் செயல்திட்டம், இயக்குநர் சுற்றுச்சூழல் மற்றும் நிலைத்தன்மை (இரயில் மேம்பாடு மற்றும் விநியோகம்) நியூ சவுத் வேல்ஸ் போக்குவரத்துக் கழகம், 4 பரமட்டா சதுக்கம், 12 டார்சி தெரு, பரமட்டா, நியூ சவுத் வேல்ஸ் 2150
- எங்கள் சமூகத்தின் நுழைவு அமர்வுகளில் ஒன்றில் கலந்துகொள்வது.

**7 அக்டோபர் 2024 திங்கட்கிழமை இரவு 23:59 மணிக்குள்** தயவுசெய்து உங்கள் பின்னூட்டத்தை வழங்கவும்.

**உங்கள் பின்னூட்டம் சமூகத்திற்கு எவ்வாறு முக்கியமானது என்பதைப் புரிந்துகொள்ள போக்குவரத்துக் கழகத்துக்கு உதவும்.**

## குழுவைச் சந்திக்கவும்

செயல்திட்டக் குழுவை வந்து சந்திக்கவும், கேள்விகளைக் கேட்கவும், செயல்திட்டத்தைப் பற்றி மேலும் அறிந்துகொள்ளவும் நாங்கள் உங்களை அழைக்கிறோம். எப்பிங் நிலையம் (Epping Station), எப்பிங் கோல்ஸ் (Epping Coles), ஈஸ்ட்வுட் வணிக மையம் (Eastwood Shopping Centre) மற்றும் கார்லிங்ஃபோர்ட் வளாகம் (Carlingford Court) ஆகிய இடங்களில் நீங்கள் எங்களை வந்து பார்க்கலாம். உங்கள் பகுதியில் நாங்கள் எப்போது வருவோம் என்பது பற்றிய கூடுதல் தகவல்களுக்கு செயல்திட்ட வலைப்பக்கத்துக்குச் செல்லவும்.

## எனது பின்னூட்டத்தினால் என்ன நடக்கும்?

பொதுக் காட்சிக் காலத்தில் பெறப்பட்ட அனைத்துப் பின்னூட்டங்களையும் நாங்கள் கவனமாகப் பரிசீலிப்போம். சமூகத்தினர் மற்றும் பங்குதாரர்களால் எழுப்பப்படும் பிரச்சினைகளுக்கான பதில்களை உள்ளடக்கிய ஒரு அறிக்கை உருவாக்கப்பட்டு, செயல்திட்ட வலைப்பக்கத்தில் வெளியிடப்படும்.

## அடுத்தப் படிநிலைகள்

தொடர்ந்து செயல்படும் சமூக ஈடுபாடு

- ஆரம்ப தள ஆய்வுகள்
- செயல் உத்திக்கான வடிவமைப்பு
- ஆரம்ப வேலைகளின் தொடக்கம் (குளிரூட்டிப் பிரிவு இடமாற்றம்)
- நாங்கள் இங்கே இருக்கிறோம் — கருத்து வடிவமைப்பின் காட்சித் தோற்றம் மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளின் மதிப்பாய்வு
- தீர்மான அறிக்கை
- விரிவான வடிவமைப்பு
- கட்டுமானம்*

*செயல்திட்ட ஒப்புதலுக்கு உட்பட்டு, 2025 ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு முடிக்க சுமார் ஐந்து ஆண்டுகள் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## எங்களை தொடர்பு கொள்ளவும்

செயல்திட்டத் தகவல் இணைப்பு **1800 979 577** (வணிக நேரங்களில்)

**parramatta@transport.nsw.gov.au**

**எப்பிங் பாலச் செயல்திட்ட** இயக்குநர் சுற்றுச்சூழல் மற்றும் நிலைத்தன்மை (இரயில் மேம்பாடு மற்றும் விநியோகம்) நியூ சவுத் வேல்ஸ் போக்குவரத்துக் கழகம் (Transport for NSW), 4 பரமாட்டா சதுக்கம், 12 டார்ஸி தெரு, பரமாட்டா, நியூ சவுத் வேல்ஸ் 2150.

செயல்திட்ட வலைப்பக்கத்துக்குச் செல்ல க்யூ. ஆர். குறியீட்டை (QR code) அலகீடு (scan) செய்யவும் அல்லது **transport.nsw.gov.au/epping-bridge** என்ற இணையதளத்துக்குச் செல்லவும்.

www.transport.nsw.gov.au/privacy-statement#Your_Privacy

**Interpreter service**

For languages other than English call **131 450**
Mandarin • Cantonese • Korean • Hindi • Tamil

获取英语以外的其他语言口译协助服务可以致电**131 450**

獲取英語以外的其他語言傳譯協助服務可以致電**131 450**

영어 외 기타 언어 통역 서비스는 **131 450**번으로 전화하세요

अंग्रेज़ी के अतिरिक्त अन्य भाषाओं के लिए दुभाषिया सेवा **131 450** पर कॉल करें

ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய மொழிகளுக்கான மொழிபெயர்த்துரைப்பாளர் சேவைக்கு அழையுங்கள் **131 450**